# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டம்

## கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது




**புதுக்கோட்டை,அக்.17-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டம், கலெக்டர் மு.அருணா, தலைமையில் (16.10.2025) நடைபெற்றது.

பின்னர் கலெக்டர் அவர்கள் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்களின் கல்வி நலனில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், மாணாக்கர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உண்டு கல்வி பயிலும் வகையில், தமிழக அரசின் சார்பில் மாணாக்கர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுவரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

இத்திட்டங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் கண்காணித்து ஆய்வு செய்திட அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில், குறைகள் ஏதுமிருப்பின் அதனை உடனடியாக நிவர்த்தி செய்திடுமாறு தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இன்றையதினம் நடைபெற்ற கூட்டத்தில், இத்திட்டங்கள் பள்ளிகளில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்தும், குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சத்தான காலை உணவுகளை சரியான நேரத்திற்குள் வழங்குவது குறித்தும் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்தும்; கூட்டம் நடைபெற்றது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தினை மாணாக்கர்களிடம் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய முறையில் கொண்டு சேர்த்திட வேண்டும் எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ரேவதி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# திருச்சி மாவட்டம், மணப்பாறை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் செயல்பாடுகள்

## கலெக்டர் வே.சரவணன் நேரில் ஆய்வு



**திருச்சி,அக்.17-**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் செயல்பாடுகளையும் மேலும், திட்டத்தின் கீழ் நமலஉ மற்றும் ஆதார் எண் வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்கப்படும் செயல்பாடுகளையும் மேலும் Pஅமளையn திட்டத்தின் கீழ் அனைத்து விவசாயிகளையும் தொடர்பு கொண்டு நமலஉ செய்திடவும். ஆதார் எண்ணை அவர்களது வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்க உரிய நடவடிக்கை எடுத்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தற்போது விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்கள் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஈடு செய்திடும் வகையிலும் அவர்களின் வாழ்வாதாரம் மீட்டும் வகையிலும் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெல் (சம்பா), மக்காசோளம், பருத்தி ஆகிய பயிர்களுக்கு நவம்பர் 15 தேதிக்குள் பயிர் காப்பீடு செய்திட விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், மேலும் இப்பருவத்திற்கு தேவையான நெல், சோளம், கடலை, உளுந்து போன்ற விதைகளை, நுண்ணூட்ட சத்து, உயிர் உரங்கள் ஆகியற்றை போதுமான அளவில் இருப்பு வைத்து விநியோகம் செய்திட அலுவலர்களுக்கு கலெக்டர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து, தோட்டக்கலைத் துறையின் கீழ் ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கத்தின் கீழ் கத்தரி, தங்காளி, மிளகாய், வெண்டை, கீரைகள், கொத்தவரை ஆகிய 6 வகையான விதைகள் அடங்கிய விதை தளைகள் தொகுப்பு மற்றும் மாடித் தோட்ட தளைகள் ஆகியவற்றை உடன் விநியோகம் செய்திட அறிவுறை வழங்கினரர்.

இந் நி கழ் வின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயராணி, வேளாண்மை உதவி இயக்குநர் மோகனா, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் (மணப்பாறை) சிவராமகிருஷ்ணன், மணப்பாறை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# திட்டச்சேரி ப.கொந்தகை மதாரியா உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் கலை திருவிழா



**நாகப்பட்டினம்,அக்.17-**

நாகை மாவட்டம் திட்டச்சேரி ப.கொந்தகை மதாரியா உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் ஒன்றிய அளவிலான கலை திருவிழா புதன் கிழமை நடைபெற்றது.

திருமருகல் ஒன்றியம் ப.கொந்தகை மதாரியா அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் உதவி பெறும் பள்ளிகளுக்கான ஒன்றிய அளவிலான கலைத்திருவிழா நடைபெற்றது.

இதில் திருமருகல் வட்டாரக்கல்வி அலுவலர்கள் வே.சிவக்குமார், தை.லீனஸ் தலைமையிலும், பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஷே.அப்துல்காதர் மற்றும் வட்டார வள மைய மேற்பார்வையாளர் து.சந்தானம் (பொ) ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் க.நடராஜன் வரவேற்றார்.

நடுவர்களாக திட்டச்சேரி மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் மைதிலி மற்றும் புறாகிராமம் பள்ளி முதுகலை ஆசிரியர் சக்திவேல் இராதாகிருஷ்ணன் ஆகியோர் தொகுத்து வழங்கினர். பனங்குடி பள்ளி தலைமை ஆசிரியர் சை.கியூரி ஆட்லின் மேரி நன்றி கூறினார்.

# திருவாரூர் நகரமன்றம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள்

## நகரமன்ற தலைவர் வழங்கினார்



**திருவாரூர்,அக்.17-**

திருவாரூர் நகராட்சி நிர்வாகம் சிறந்து விளங்குவதில் பெரும் பங்காற்றி வரும் து£ய்மை பணியார்களை தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர்களை கௌரவிக்கும் வகையில் நகரமன்றம் சார்பில் 300 து£ய்மை பணியாளர்களுக்கு நேற்று நகராட்சி அலுவலகத்தில் இனிப்பு,வேட்டி,சட்டை,புடவை மற்றும் தீபாவளி பரிசுகள் வழங்கப்பட்டன.நகர மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில் தலைமையில் நடைப்பெற்ற இந்த நிகழச்சியில் நகர மன்ற துணை தலைவர் அகிலாசந்திரசேகர்,ஆணையர் சுரேந்திரஷா,பணி நியமன குழு உறுப்பினர் வாரைபிரகாஷ்,நகர மன்ற உறுப்பினர்கள் செந்தில்,ரஜினிசின்னா,அசோகன்,வரதராஜன்,ஷகிலா பானு,பெனசிர் ஜாஸ்மின்,து£ப்புரவு அலுவலர் சுவாமிநாதன்,நகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பிஷப் ஹீபர் கல்லூரி டான்போஸ்கோ ஐ.டி.ஐ இணைந்து மொபைல் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



**திருச்சி,அக்.17-**

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), சமூகப் பணி துறை, டான் போஸ்கோ ஐ.டி.ஐ, நவலூர்குட்டப்பட்டு ஆகியவற்றின் இணைப்பில் "மொபைல் அடிக்க்ஷன்" எனும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி டான் போஸ்கோ ஐ.டி.ஐ வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி, அருள் தந்தை.பிரான்சிஸ் சேவியர் ஷிஞிபி, முதல்வர், டான் போஸ்கோ ஐ.டி.ஐ கிவிஷிகிவி, திருச்சி தலைமை உரை வழங்கினார். மொபைல் போனின் அதிகப்படியான பயன்பாடு இளைஞர்களின் மனநலனுக்கும் சமூக உறவுகளுக்கும் ஏற்படுத்தும் பாதிப்புகளைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வழிகாட்டும் நிபுணராக மிஸ். பி. ஜோஸ்பின் சுதந்த்ரா, ஹெப்ரோன் கவுன்சிலிங் சென்டர், ரெங்கா நகர், திருச்சி கலந்து கொண்டு, மொபைல் அடிமைத்தனத்தின் காரணங்களையும் அதைத் தவிர்க்கும் வழிமுறைகள் அதனைத் தொடர்ந்து, மாணவர்கள் பின்பற்றக்கூடிய "மொபைல் அடிமைத்தனத்தை குறைக்கும் 21 நாட்கள் திட்டம்" ஒன்றை வழங்கினார் .

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக டாக்டர் ஜே.ஃப்ளோரன்ஸ் ஷாலினி, உதவி பேராசிரியர், சமூகப் பணி துறை, பிஷப் ஹீபர் கல்லூரி பணியாற்றினார்.

இளைஞர் நலன் குழுவினர் காயத்ரி.பி, ஹன்னா சாஜி, கென்னின் ஜுச்சன்.ஜே, ஷைனி ஷாரன். எஸ், நிக்சன் அஸ்டில். பி.ஏ ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

நிகழ்ச்சியில் மாணவர்கள் தயாரித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் பகிரப்பட்டதுடன், "வில்லுப்பாட்டு" வடிவில் "மொபைல் போன் நம்மை அடிமையாக்குது" என்ற தலைப்பில் மாணவர்கள் சிறப்பாக நிகழ்த்திய பாடல் நிகழ்ச்சி அனைவரின் பாராட்டையும் பெற்றது. இதன் மூலம் சமூகத்தில் விழிப்புணர்வை மகிழ்ச்சியான முறையில் பரப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. நிகழ்ச்சி முடிவில் கலாசார நிகழ்ச்சிகள் மூலம் இளைஞர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்டன.




**தஞ்சாவூர்கலெக்டர்அலுவலகக்கூட்டரங்கில்கலெக்டர்பா.பிரியங்காபங்கஜம்தலைமையில் மாவட்ட சுகாதாரத்துறை சார்பில் அரசு மருத்துவமனை, தலைமை மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய பொறுப்பு மருத்துவ அலுவலர்களுடன் மாவட்ட நலச்சங்க செயற்குழு மாதாந்திர திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கலைவாணி , இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) பொறுப்பு மரு.அருள்செல்வன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.**

# அதிக அளவில் ரத்ததானம் - அரசு இன்ஜினியரிங் கல்லூரிக்கு பாராட்டு



**தஞ்சாவூர்,அக்.17-**

தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தை முன்னிட்டு கடந்த 2024-2025 கல்வியாண்டில் கும்பகோணம் அரசு இன்ஜினியரிங் கல்லூரி அதிக அளவில் ரத்ததானம் அளித்த நிறுவனமாக தேர்வாகி கௌரவிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன் கல்லூரியின் சார்பில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் சதீஷ்குமார், முனைவர் பார்த்தசாரதி ஆகியோரிடம் சான்றிதழ் மற்றும் கேடயத்தை வழங்கி பாராட்டினார்.

# திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் வ.மோகனச்சந்திரன் வழங்கினார்



**திருவாரூர்,அக்.17-**

திருவாரூர் மாவட்டத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம்; நடைபெற்று வருவதை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் இம்மாதம் (அக்டோபர்) வரை நகர்புறப்பகுதிகளில் 54 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 131 முகாம்களும் என மொத்தம் 185 முகாம்கள் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப்பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின்கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கியுள்ளனர். அதனடிப்படையில், அட்டவணைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நாட்களில் பொதுமக்கள் தொடர்புடைய முகாம்களில் கலந்து கொள்ளலாம்.

மேலும், இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருவாரூர் ஒன்றியம், வண்டாம்பாளை ஊராட்சி, ஸ்ரீ மகாசக்தி மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு, வருவாய்த்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு வருமான சான்றிதழும், வேளாண்மை-உழவர் நலத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு வேளாண் இடுப் பொருள்களையும் வழங்கினார்கள்.

கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு, வருவாய்த்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு அரசு வீட்டுமனை பட்டாவினையும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு மருத்துவ காப்பீட்டு அட்டையினையும் வழங்கினார்கள்.

இம்முகாமில், வருவாய் கோட்டாட்சியர்கள் சத்யா (திருவாரூர்), யோகேஸ்வரன் (மன்னார்குடி), கூத்தாநல்லூர் நகர்மன்றத்தலைவர் பாத்திமா பஷிரா தாஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சங்கர் மற்றும் திருவாரூர், நன்னிலம், கூத்தாநல்லூர் வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# விபத்து, ஒலி மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாட பொதுமக்களுக்கு கலெக்டர் மீ.தங்கவேல் வேண்டுகோள்

**கரூர்,அக்.17-**

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியைவெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும் காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய் வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடைகோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

மேலும், உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், பட்டாசுகளை வெடிப்பதால் காற்றின் தரம் பாதிக்கப்படுவது குறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், திறந்தவெளியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு 2018-ஆம் ஆண்டிலிருந்து தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்தும் உடல் நலனில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.. மாவட்ட அளவில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட கலெக்டர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சுற்றுச்சூழலை பாதிப்பு இல்லாமல் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் கீழ்கண்டவற்றைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறhர்கள் :-ஆகவே, பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து இந்த தீபாவளியை மாசற்ற தீபாவளியாக மாற்ற தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறது. அனைவருக்கும் இதயங்கனிந்த மாசற்ற தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

# மயிலாடுதுறையில் இளைஞர் எழுச்சி தின பேரணி



**மயிலாடுதுறை,அக்.17-**

மயிலாடுதுறையில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏபிஜே அப்துல் கலாம் பிறந்த நாள் தினத்தை முன்னிட்டு பள்ளி கல்வித்துறை நாட்டு நலப்பணி திட்டம் மயிலாடுதுறை, சிசிசி சமுதாயக் கல்லூரி, மயிலாடுதுறை வர்த்தக சங்கம் இணைந்து நடத்திய இளைஞர் எழுச்சி தின பேரணியை வர்த்தக சங்க செயலாளர் பிரகதி செந்தில் கொடியசைத்து துவங்கி வைத்தனர். நாட்டு நலப்பணி திட்ட மாவட்ட தொடர்பு அலுவலர் எம் முத்துக்குமாரசாமி வரவேற்றார், தியாகி ஜி நாராயணசாமி நகராட்சி மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் தாமரைச்செல்வன் தலைமை வகித்தார், சுகாதாரத்துறை காளி வட்டார மருத்துவ அலுவலர் மரு.கிளின்டன், பாஸ்கர், சிசிசி சமுதாயக் கல்லூரி நிறுவனர் தலைவர் ஆர் காமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக மயிலாடுதுறை வர்த்தக சங்கத்தின் தலைவர் சீமாட்டி ரியாஜுதீன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார். இப்பேரணியில் தி.ப தி.அர.தேசிய மேல்நிலைப்பள்ளி, புனித பவுல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, தியாகி ஜி நாராயணசாமி நகராட்சி மேல்நிலைப்பள்ளி, சிசிசி சமுதாயக் கல்லூரி மாணவிகள், மேரா யுவ பாரத் தன்னார்வலர்கள், வர்த்தக சங்க பொருளாளர் என் ஹெச்.எஸ்.ரமேஷ் சந்த், ஏஆர்சி, கிரிஜா,ரமேஷ் ராகவேந்திரன், அறம் செய் சிவா, மகாவீர் சந்த் ஜெயின், வர்த்தகர் சங்க நிர்வாகிகள், நாட்டு நடப்பு பணித்திட்ட திட்ட அலுவலர்கள் ஆசிரியர்கள், காவல்துறையினர், சுகாதாரத்துறையினர், தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மயிலாடுதுறை நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தொடங்கிய பேரணி மகாதான தெரு சப்ஜெயில் வழியாக சென்று பட்டமங்களத் தெருவில் முடிவடைந்தது.

